தலைப்பு 120 – மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சு

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சில் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் நிதி ஓட்டக் கூற்றுகள் என்பவற்றை கொண்டமைந்த 2019 டிசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றுகைகள் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்ந்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கியுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்பின்கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 11(1) பிரிவு பிரகாரம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது கருத்துகள் மற்றும் அவதானிப்புகள் உள்ளடக்கிய சாராம்ச அறிக்கை 2020 யூன் 24 ஆந் திகதி பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தில் 11(2) பிரிவு பிரகாரம் அமைச்சிற்கு ஏற்புடையதான வருடாந்த விபரமான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்டோபர் 12 ஆந் திகதி பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரிடம் வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(6) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆவது பிரிவு பிரகாரம் இவ்வறிக்கை. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரசாங்க கணக்கு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட குறித்த நிதிக் கூற்றுகளில் 2019 டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. **நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரது பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------------

பொதுத் துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கமைவாகவும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 38 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைவாகவும் தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகளை நிருணயித்தல் பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரதும் கணக்கு கொடுக்கும் அலுவலரதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டதில் 38(1)(ஈ) உப பிரிவு பிரகாரம் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர் வலய அபிவிருத்தி அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டுக்கான பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு முறைமை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதாக கணக்கு கொடுக்கும் அலுவலர் சான்றுப்படுத்தல் வேண்டுமென்பதுடன், குறித்த முறைமையின் பயனுள்ள தன்மை தொடர்பாக அவ்வப்போது மீளாய்வு செய்து அதன்படி முறைமை பயனுள்ளவாறு மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்தல் வேண்டும்.

1.4. **நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

-----------------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அதிபதியின் சாராம்ச அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர்

நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக அமைச்சின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் அடையாளம் காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு குறைப்பாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரை அறிவுறுத்தப்பட்டது.

1.5 ஏனைய சட்டத்துடனான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 6 (1) (ஈ) பிரிவு மற்றும் 38 ஆவது பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக் கூற்றுகள் கடந்த ஆண்டுடன் ஒழுங்கமைதல்.

(ஆ) இவ்வறிக்கையில் 1.6.3. பந்தியில் உள்ளடக்கியுள்ள அவதானிப்புகள் தொடர்பில் கடந்த ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட, நிதிக் கூற்றுகள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை.

## 1.6 நிதிக் கூற்றுகள் தொடர்பான அபிப்பிராயம்

### 1.6.1 நிதிச்செயலாற்றுகை கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடு-க்கும் அலுவலரின் அபிப்-பிராயம் |
|---|---|---|
| அமைச்சின் புத்தகங்களின்படி ஏனைய கிடைக்கப்பெறுவன-வைகள் ரூபா.41,611,755 ஆயி-னும், நிதி செயலாற்றுகை கூற்றில் ரூபா.41,498,755 என்று குறிப்பிட-ப்பட்டிருந்தது. | செவ்வையாக நிதிக் கூற்றுகளை தயாரித்தல் வேண்டும் | செவ்வையாககி கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளு-ம்படி ஆலோசனை வழங்கப்-பட்டுள்ளது. |

### 1.6.2 நிதி நிலைமை கூற்று

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ) முற்பணக் கணக்கில் மீதி திறைசேரி கணினி குறிப்-புகளின்ப ரூபா .72,623,444 ஆனதுடன், அமைச்சின் புத்தகங்களின்படி அப் பெறுமதி ரூபா.72,468,359 ஆகியதால் வேறுபாடு-களை | அமைச்சின் புத்தகங்கள் மற்றும் திறைசேரி கணினி அச்சீட்டு குறிப்புகளின் வேறுபாடுக-ளுக்கு காரணங்களை கண்டறிந்து கட்டுநிதி சீராக்கல் கணக்கில் | 2020 பெப்ருவரி கண-க்கு சாராம்சம்மூலம் செவ்வையாக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுநிதி சீராக்கல் கணக்கில் சீராக்கப்படவில்லை. | சீராக்கப்படுதல் வேண்டும். | |
| (ஆ) | தேர்தல் ஆணைக்குழுவால் மீளளிப்புச் செய்ய வேண்டிய ரூபா.548,508 ஆன மீதி அனுப்பி வைக்கப்பட்டபோதும், திறைசேரி புத்தகங்களில் காட்டப்படாத 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா. 2,014,743 ஆன கட்டுநிதி மீதி ஒழுங்கு முறையில் நிதி நிலைமை கூற்றுகளில் நடைமுறை பொறுப்பாக மற்றும் நடைமுறை சொத்துக்களின் கீழும் பணமும் பணத்திற்கு சமமானவைகளின் கீழும் குறிப்பிடப்படவில்லை. | செவ்வையாக கணக்கு தலைப்புகளின் கீழ் கொடுக்கல் வாங்கல் குறிப்பு வைக்கப்படுதல் வேண்டும். | அவதானிப்புடன் இணங்குகின்றேன். எதிர்வருங் காலங்களில் நிதி நிலைமைக் கூற்றுகளில் குறிப்பு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்கின்றேன். |

### 1.6.3 காசுப் பாய்ச்சல் கூற்று

----------------------

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்விற்கான ஆண்டில் காசால் செலவிடப்பட்ட ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் தொழில்பாட்டு செலவினங்களின் மொத்தம் ரூபா.851,017,115 ஆயினும், நிதி ஓட்டக் கூற்றில் அது ரூபா.870,265,396 ஆக காட்டப்பட்டிருந்தது. | எல்லா காசுப் பாய்ச்சல்களையும் செவ்வையாக பிரதிபலிக்கும் வகையில் காசுப் பாய்ச்சல் கூற்றி-னை தயாரிக்கப்படுதல் வேண்டும். | செவ்வையான படிவத்தறிகு அமைவாக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |
| (ஆ) | நிவாரணம் மற்றும் மாற்றுதல் பெறுமதி ரூபா.82,900 ஆல் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எல்லா காசுப் பாய்ச்ச-ல்களும் செவ்வையாக பிரதிபலிக்கும் வகையில் நிதி ஓட்டக் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | செவ்வையான படிவத்திற்கு அமைவாக காசுப் பாய்ச்சல் கூற்றுகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஏசீஏ – 5 படிவம் பிரகாரம் முற்பணத் தொகையில் கிடைக்கப்பெறுதல் மற்றும் செலத்தல் பெறுமதி ஒழுங்கு முறையில் ரூபா.24,323,842 ம் மற்றும் ரூபா.33,196,349 ம் ஆகியதுடன், குறித்த பெறுமதி காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | எல்லா காசுப் பாய்ச்ச-ல்களும் செவ்வையாக பிரதிபலிக்கும் வகையில் நிதி ஓட்டக் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | செவ்வையான படிவத்திற்கு அமைவாக காசுப் பாய்ச்சல் கூற்றுகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஈ) | பௌதீக சொத்துக்களை நிருமாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடு-களை கைப்பற்றிக் கொள்-ளும் பெறுமதி ரூபா.46,799 ஆல் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எல்லா காசுப் பாய்ச்ச-ல்களும் செவ்வையாக பிரதிபலிக்கும் வகையில் நிதி ஓட்டக் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். | செவ்வையான படிவத்திற்கு அமைவாக காசுப் பாய்ச்சல் கூற்றுகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

### 1.6.4 ஆவணங்கள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| **பிணை ஆவணம்** | | |
| நிதி ஒழுங்குவிதி 891(1) பிரகாரம் பிணை வைக்கப்பட வேண்டிய அலுவலர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடக்கிய பிணை ஆவணம் தயாரிக்கப்பட்டிரு-க்கவில்லை. | நிதி ஒழுங்குவிதி 891(1) குறிப்பிடபப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கும் வகையில் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் தொடர்பாக பிணை ஆவணம் பேணுதல் வேண்டும். | எதிர்வருங் காலத்தில் இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

**1.6.5** சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | | | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் எனபவற்றின் தொடர் | | பெறுமதி<br>ரூபா. | ஒழுங்கமையாமை | | |
| **(அ)** | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு-விதிக் கோவை-யில் நிதி ஒழுங்குவிதிகள் 103 (1) (ஊ) | 13,902,198 | 2015 மற்றும் 2017 ஆண்டுகளில் 03 சந்தர்ப்பங்-களில் ஏற்பட்ட வாகன விபத்து தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகள் பிரகாரம் நட்ட-ங்களை அறவிடு-வதற்கு நடவடி-க்கை மேற்கொள்-ளாமை | நிதி ஒழுங்-குவிதி பிர-காரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | நட்டங்களை அறவிடு-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| **(ஆ)** | 2016 மார்ச் 24 ஆந் திகதி 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை (ை) 2.2.4மற்றும் 2.2.5 பந்திகள் | - | கருத்திட்ட பணிப்-பாளர் மற்றும் ஏனைய பணியாற தொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்-கையில் பகிரங்க அகறிவிப்பு அல்-லது பத்திரிக்கை அறிவிப்புகள்மூலம் போதியளவு காலப் பகுதிக்குள் | சுற்றுநிருபத்தின் ஏற்பா-டுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அமைச்சர் அவர்க-ளின் எழுத்திலான கட்டளைபடி அங்கீக-ரிக்கப்பட்ட பதவிக-ளுக்கு மட்டும் நியமனங்களை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கோரு-தல்களை மேற்-கொண்டு முறை-யான நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும் குறித்த முறைமை பின்பற்றியிருக்கவி ல்லை. | | |
| (ை) பந்தி | 2.2.8 | 1,216,245 | கருத்திட்டத்தில் பணியாற் தொகுதி-யினரின் உறுப்-பினராக 65 வயது விஞ்சிய பின்னரும் எவரொருவரையும் சேவையில் ஈடபடு-த்தாதிருப்பதற்கு அமைச்சு செய-லாளர் உறுதிப்ப-டுத்திக் கொள்ளு-தல் வேண்டுமா-யினும், 65 வயது விஞ்சிய இரண்டு அலுவலர்களை சேவையில் ஈடு-படுத்தி அதற்கு சம்பளம் மற்றும் வேதனம் செலுத்-தியிருத்தல். | சுற்றுநிருபத் தின் ஏற்பா-டுகளின் பிரகாரம் நடவடிக்கை க மேற்கொள் ளுதல் வேண்டும். | அமைச்சர் அவர்க-ளின் எழுத்திலான கட்டளைபடி அங்கீக-ரிக்கப்பட்ட பதவிக-ளுக்கு மட்டும் நியம-னங்கள் வழங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2016 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க தகவல் அறிந்துக் கொள்ளும் உரிமைகள் தொடர்பான சட்டத்தில் 9(1)(அ) பிரிவு | - கருத்திட்டம் தொடங்குதல் தொடர்பாக பொது மக்களை அறிவு-றுத்தும்போது அமைச்சர்களுக்கான கடமைப் பொ-றுப்புகளை நிறை-வேற்றப்படவில்லை | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | கணக்காய்வு ஐயப்-பாடு செவ்வையானதாகும். |

## 2. நிதி மீளாய்வு

---------------------

### 2.1 செலவின முகாமைத்துவம்

-------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | 4 மூலதன செலவின விடயங்க-ளின் பொருட்டு ரூபா.2,850,000 ஆன தேறிய ஒதுக்கீடு முற்றுமுழுதாக எஞ்சியுள்ளது. | செவ்வையாக மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். | செலவினங்களை ஏற்படாமை, அலுவலக உபகரணங்களை சிக்கனத்துடனும் வினைத்திறனுடனும் பயன்படுத்தியமையால் இந்த மூலதன ஒதுக்கீடு எஞ்சியுள்ளது. |
| (ஆ) | 8 மீண்டுவருஞ் செலவின விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடுக-ளில் 33% தொடக்கம் 73% வரையிலான எல்லைக்குள் எஞ்சியுள்ளது. | செவ்வையாக மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். | இயந்திரங்களின் தேவைப்பாடு ஏற்ப-டாமை, வினைத்திறனுடனான பயன்-பாடு, 2019 ஆம் ஆண்டில் நிலவிய அரசியல் ஸ்தீரமற்ற நிலைமை காரணமாக குறித்த ஒதுக்கீடு எஞ்சுவதற்கு காணரமாகியுள்ளது. |
| (இ) | 11 மூலதன செலவின விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடுக-ளில் 30% தொடக்கம் 83% வரையிலான எல்லைக்குள் விஞ்சியுள்ளது. | செவ்வையாக மதிப்பீடு தயாரித்தல் வேண்டும். | அமைச்சரவை கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்களில் தேவைகள் ஏற்ப-டாமை, வாகனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை வினைத்-திறனுடன் பயன்படுத்தல் இந்த ஒதுக்கீடுகள் எஞ்சுவதற்கு காரணமாகியுள்ளது. |

## 2.2. வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டு தொடக்கம் திறைசேரி கணினி அச்சீட்டு குறிப்புகளில் ரூபா.20,000,000 ஆன வைப்பு மீதி உள்ளதுடன், அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. | 2017 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போதுள்ள வைப்புகளின் மீதிகளை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அரச கணக்கு திணைக்களத்திடம் 2018 ஆம் ஆண்டு யூலை 11 ஆந் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 நோக்குகை மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை பாதுகாப்பதற்காக நல்லாட்சி பயன்பாடுகளை உறுதிப்படுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட தேவைகளை தயாரித்தல், கொள்கைகளை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், ஒழுங்குபடுத்தல் என்பன அமைச்சின் செயற்பணியாயினும், சிறுவர் மற்றும் மகளிர் உரிமைகளை உறுதிப்படுத்தல், பாதுகாத்தல், மேம்படுத்தல் என்பவற்றுக்காக தயாரிக்கப்பட்ட சட்டங்கள் மற்றும் கொள்கைகள் வலுப்படுத்தி நடைமுறைப்படுத்தியிருக்கவில்லை. | நோக்குகை மற்றும் செயற்பணிக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | அரச பொறிமுறையில் மகளிர் மற்றும் சிறுவர்களின் நலனோம்பல் கருதி நடவடிக்கை மேற்கொள்கின்ற பிரதான பங்குதாரர்களான இவ்வமைச்சு தேசிய ரீதியாக முக்கியமாகும் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எப்போதும் பணியாற்றுதல் வேண்டும். |

**3.2 திட்டமிடல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| 2014 பெப்ருவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையில் 03 ஆவது பந்தி பிரகாரம், சம்பந்தப்பட்ட ஆண்டுக்கு இற்றைப்படுத்திய நிறுவனத்தின் அமைப்பு கட்டமைவு, அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி மற்றும் தற்போது சேவையில் உள்ள பணியாற்தொகுதி தொடர்பான விபரங்கள் உள்ளடங்கும் வகையில் செயற்றிட்டம் தயாரிக்கப்படவில்லை. | சுற்றுநிருப ஏறபாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | எதிர்வருங் காலத்தில் செவ்வையாக தயாரிக்கப்படும். |

**3.3 எதிர்பார்க்கப்பட்ட விளைவளவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|
| (அ) உலர் வலய அபிவிருத்தி கருத்திட்டம் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா.331,000,000 ஆன தொகையில், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் ரூபா.67,372,000 தொகை அதாவது, 20% ஐ மட்டும் செலவிடப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 19 ஆந் திகதி இக் கருத்திட்டம் மகாவலி விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்ட, அத் திகதியில் நீர் சுத்திகரிப்பு நிலையம் நிருமாணிக்கும் முன்னேற்றம் 10% ம், விவசாய பாதைகளை நிருமாணிக்கும் 05 கருத்திட்டங்களின் முன்னேற்றம் | எதிர் பார்க்கப்படும் விளைவளவு மட்டத்தினை அடைந்துக் கொள்ளுதல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் உலர் வலய அபிவிருத்தி கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும் போது அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் பெறுகை திட்டங்களுக்கு ஒழுங்கமையாத நிலைமைகள் ஏற்பட்டவுடன், அவற்றை செவ்வையாக்குவதற்கு எதிர் பார்க்கப்படாத அளவிலான காலம் செலவிடப்பட்டமையால் இலக்குகளில் அதிக முன்னேற்றம் |

| | | | |
|---|---|---|---|
| | 5% தொடக்கம் 20% வரை இடையில் காணப்பட்டது. | | எட்டவில்லை. |
| (ஆ) | 1938 மகளிர் உபகரண தொலைபேசி சேவையினை வலுவூட்டல், குறித்த சேவையினை பயனுள்ளதாக நடைமுறைப்படுத்துவதற்காக உதவிச் சேவைகளை வலுவூட்டல், பொது மக்களை அறிவுறுத்தல் ஆகிய கடமைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா.4,250,000 ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பினும், மீளாய்விற்கான ஆண்டில் ரூபா.1,572,873 ஐ செலவிடப்பட்டிருந்தது. செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த தகவல் தொழிநுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி என்ற பணி மீளாய்விற்கான ஆண்டில் நிறைவேற்றியிருக்கவில்லை என்பதுடன், சம்பந்தப்பட்ட தரப்புகளது 03 கூட்டங்களையும், குடும்ப ஆலோசனை அறிவுறுத்தல்கள், பொலிஸ் அலுவலர்களை பயிற்றுவித்தல், விடய முகாமைத்துவ பயிற்றுவிப்புகள் போன்ற 4 நிகழ்ச்சிகளையும் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பினும், சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் 1 கூட்டமும், 2 நிகழ்ச்சித்திட்டங்களையும் மட்டும் நடாத்தப்பட்டிருந்தது. | செயற்றிட்டம் படி திட்டமிடப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல் வேண்டும். | புதிய தொழிநுட்ப முறைமையினை கொள்வனவு செய்வதற்காக செயற்றிட்டம் அங்கீகரிக்கப்பட்டிருப்பினும்,பெறுகை நடைமுறையில் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக அதனை கொள்வனவு செய்வதில் தாமதம் ஏற்பட்டது. அலுவலர்களை பயிற்றுவிக்கும் ஒரு நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டு அவர்கள் ஊடாக பிரதேச செயலகங்களில் உள்ள மகளிர் மற்றும் சிறுவர் அலகுகளின் அலுவலர்களை பயிற்றுவிப்பதற்கு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப்பட்டது. 2020 சனாதிபதி தேர்தலில் தபால் வாக்குகள் மற்றும் தேர்தல் கடமைகளின் பயிற்சிக்கு உரிய அலுவலர்கள் ஈடுபட்டதன் காரணமாக நிகழ்ச்சித்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்ட திகதியில் நடாத்துவதற்கு முடியவில்லை. |
| (இ) | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன், 2019 செப்தெம்பர் 11 ஆந் திகதி மேற்கொண்ட உடன்படிக்கைகள் பிரகாரம் மீளாய்விற்கான ஆண்டில் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 2019 ஒக்டோபர் 29 ஆந் திகதி | செயற்றிட்டத்தில் உள்ளடக்கியுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கு வரவு செலவு மதிப்பீடுகள்மூலம் ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்து கொள்ளுதல் | 2019 ஆண்டில் வருடாந்த வரவு செலவு மதிப்பீட்டில் இந்த கருத்திட்டம் பொருட்டு ஒதுக்கீடுகள் இல்லாமை காரணமாக 2019 நவம்பர் 11 ஆந் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா.1,850,000 ஆன காசோலைகள் கிடைக்கப்பெற்றிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஏற்புடையதான செலவு விடயங்களுக்கு வரவு செலவு மதிப்பீடுகள்மூலம் ஒதுக்கீடுகளை ஒதுக்கீடு செய்யாமை காரணமாக குறித்த காசோலை திறைசேரியிடம் மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. நிதி செலவு செய்யும் அதிகாரம் 2019 டிசெம்பர் 24 ஆந் திகதி கிடைக்கப்பெற்றதன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டில் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்துவதற்கு இயலாதிருந்தது. | வேண்டும் | திகதி மேலதிக ஒதுக்கீடுகள் கோரப்பட்டது. அதற்காக மேலதிக ஒதுக்கீடுகள் 2019 டிசெம்பர் 19 ஆந் திகதி கிடைக்கப்பெற்றது. |
| (ஈ) | முன்பள்ளி வயதில் உள்ள பிள்ளைகளின் போஷாக்கு நிலைமையை மேம்படுத்தல் மற்றும் வறிய குடும்பங்களுக்கு சிறிய அளவில் பொருளாதார நன்மைகளை வழங்குதல் போன்ற நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட காலை வேளை உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டம் சனவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு டிசெம்பர் மாதம் வரை நடைமுறைப்படுத்தும் நோக்கில் 217 பிரதேச செயலகப் பிரிவுகளிடம் ரூபா.400,000,000 ஆன ஒதுக்கீடுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மாவட்ட செயலகங்களில் குறைந்த நிறையுள்ள பிள்ளைகள் காணப்படும் முன்பள்ளிகள் மேலும் உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்ததுடன்,ஆண்டு இறுதியில் இந்த செலவு விடயத்தில் ரூபா.68,172,480 ஆன எஞ்சிய ஒதுக்கீடுகளை வழங்குவதற்கு செயற்படவில்லை. மே- | திட்டமிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதன் மீது கவனம் செலுத்தப்படல் வேண்டும். | சுகாதார மருத்துவ அலுவலர்களிடமிருந்து பரிந்துரைகளை பெற்றுக்கொள்வதற்கு சில காலங்கள் எடுத்தல், கட்டுநிதி திறைசேரியிடமிருந்து தாமதமாகி கிடைக்கப்பெறுதல். |

லும், குறைந்த நிறையுடன் காணப்படும் பிள்ளைகள் அதிகமாக காணப்படும் பிரதேசங்களில் எல்லா முன்பள்ளிகளுக்கும் இந்த நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படாமையால் குறித்த முன்பள்ளிகளில் உள்ள பிள்ளைகள், நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படும் முன்பள்ளிகளுக்கு செல்கின்ற போக்கு காணப்பட்டமையால் பிரச்சினைகளுடன் கூடிய நிலைமை உருவாகியிருந்தது.

### 3.4 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (ஆ) | ஆரம்ப கால குழந்தை பருவ கற்கை வட்டங்கள் தொடர்பான வீடியோ ஒன்றை உருவாக்குதல், உலக சிறுவர் தின சஞ்சிகை, அழைப்பிதழ் மற்றும் மொழிப்பெயர்ப்பு சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு தேசிய பெறுகை வழிகாட்டல கோவையில் 2.6.1 (அ) (ii), 2.8.1 (ஆ), 3.4.2 (அ), 5.4.10, 6.2.2, 6.3.6, 7.11.1, 8.12.3(அ) பந்திகளுக்கு முரணாக ரூபா.1,633,200 ஐ செலவிடப்பட்டிருந்தது. | வருடாந்தம் நடாத்தப்படும் உலக சிறுவர் தின வைபவத்திற்காக மேறகொள்ளப்பட்ட பெறுகைகள் சிறந்த திட்டமிடலுடன் பெறுகை வழிகாட்டல கோவைக்கு அமைவாக மேற்கொள்ளுதல் வேண்டும். | உலக சிறுவர் தின வைபவத்திற்கு தேவையான சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு சில வாரங்களுடன் கூடிய வரையறுக்கப்பட்ட காலம் மட்டும் இருந்தது. ஆகையால் அதற்காக அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடமிருந்து விலை கணக்குகள் கோரப்பட்டு, சமர்ப்பிக்கப்படும் ஆகக் குறைந்த விலை கணக்குகளை அமைச்சின் செயலாளரது அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டு உரிய சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்படாத வீடியோ கெமரா கொள்வனவு செய்வதற்காக ''திரிய காந்தா'' செலவு விடயத்தின் கீழ் ரூபா.1,568,715 ஐ செலவிடப்பட்டுள்ளதுடன், குறித்த செலவு விடயத்தின் நோக்கங்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட பெறுகை எனவும் அவதானிக்கப்பட்டது. | பெறுகை திட்டத்திற்கு அமைவாக உரிய செலவு விடயங்களின் நோக்கங்கள் படி பெறுகைகளை மேற்கொள்ளுதல் வேண்டும் | தவறுதலாக பெறுகை திட்டத்தில் உள்ளடக்குவதற்கு இயலாமை, துரிதமாக வீடியோ கெமரா அடங்கலாக துணைக் கருவிகளை வழங்குமாறு கோரிக்கை முன்வைத் திருத்தல், சர்வதேச மகளிர் தின வைபவத்தின் ஊடக பிரசித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வீடியோ கெமரா மற்றும் அதற்கான உபகரணங்களை துரிதமாக பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுதல். |

**3.5** சிக்கனமான கொடுக்கல்வாங்கல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம்** |
|---|---|---|---|
| (அ) | உலக சிறுவர் தின தேசிய வைபவம் கொண்டாடுவதற்காக சிறுவர் செய்லகம், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை என்பவற்றுக்கு மொத்தம் ரூபா.6,580,000 தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், அதில் சிறுவர்களுக்கு பரிசுகள், போக்குவரத்து செலவினங்கள், உணவு பான வகைகள் என்பவற்றுக்கும், பிரதேச ரீதியாக நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கும் ரூபா. 4,052,700 மட்டும் செலவிடப்பட்டிருந்தது. தேசிய வைபவங்களில் மேடைகள், அலங்காரங்கள், அழைப்பிதழ்கள், நினைவு இதழ்கள் ஆகிய பணிகளின் பொருட்டு ரூபா.2,502,165 ஐ செலவிடப்பட்டிருந்தது. சிறுவர்கள் எதிர் நோக்கும் பாரிய சமூக , பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கு | நிதியங்களை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்தல் வேண்டும். | பதில் கிடைக்கப்பெறவில்லை |

| | | | |
|---|---|---|---|
| | இந்த பணம் பயனபடுத்தல் மீது கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்விற்கான ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட செயற்றிட்டத்தில் ''திரிய காந்தா'' செலவு விடயத்தின் கீழ் சர்வதேச மகளிர் தினம் மற்றும் சிறுவர் தினம் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா.மில்லியன் 10 ஆன தொகை அடங்கலாக சர்வதேச மகளிர் தினம் பொருட்டு ரூபா.மில்லியன் 19.41 ஆன உணவு பானம், தங்குமிடங்கள் மற்றும் எரிபொருள், பிரச்சாரம், மேடைகள் என்பவற்றுக்காக செலவிடப்பட்டிருந்தது. மகளிர் எதிர் நோக்கம் பாரிய சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக நிலையான மூலோபாயங்களை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு இந்த பணத் தொகை செலவிட முடியுமாக இருந்தது. | நிதியங்களை வினைத்திறனாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்தல் வேண்டும். | சர்வதேச மகளிர் தினம் கொண்டாடுவதற்காக குறித்த வைபவத்திற்கு இணையாக ஏனைய பிரிவுகள்மூலம் அந்தந்த செலவு விடயங்கள்மூலம் வருடாந்தம் பல நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைக்கப்படுவதுடன், அந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்காக மேற்கொண்ட செலவினமும், இந்த செலவினத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதால் மொத்த செலவினம் ரூபா.மில்லியன் 19.412 என்று பதிவு செய்யப்பட்டிருந்தல். |

## 3.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கு கொடுக்கும் அலுவலரின் அபிப்பிராயம் |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர் அவர்களின் பணிகளின் பொருட்டு வழங்கியிருந்த மோட்டார் வண்டி 2015 ஆம் ஆண்டில் வேறு பாராளுமன்ற உறுப்பினரின் சாரதி ஒருவர் ஓட்டும்போது விபத்துக்குள்ளாகியிருந்தது. இது தொடர்பாக அமைச்சு அறிந்திருக்கவில்லை என்பது புலனாய்வு அறிக்கைமூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | அரசாங்கத்திற்கான சொத்துகளை உரிய அதிகாரத்துடன் பயன்படுத்தல் வேண்டும். | உரிய வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சில் உள்ள 17 வாகனங்களை முறையற்ற வகையில் வெளியக தரப்புகளுக்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | கையளிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். | கையளிப்பு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | **கையேற்கப்படாத சொத்துகளாக பயன்படுத்தல்**<br>**-------------------------------------------**<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | (i) அமைச்சினால் முறையாக கையேற்கப்படாத காணியொன்றில் ரூபா.மில்லியன் 25 செலவிடப்பட்டு 2001 ஆம் ஆண்டில் பியகம மகளிர் வதிவிடம் நிருமாணிக்கப்பட்டிருந்ததுடன், 2020, ஆகஸ்ட் 27 கணக்காய்வு திகதியிலும் கையேற்கப்படவில்லை. | முறையாக கையேற்பதற்கு அல்லது கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | கையளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன. |
| | (ii) அமைச்சினால் பயன்படுத்தும் வேறு அமைச்சுகளுக்குரிய 13 வாகனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை. | முறையான வகையில் கையேற்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். | கையளிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு கின்றன. |